# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
பங்குனி 25
ரபி. ஆகி. 26
புதன் (5-4-1978)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 86
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 35




## 'சுதந்திரத் தமிழ் ஈழம் எனும் துறையை நோக்கி'

# கூட்டணிக் கப்பலை திசைமாறாது செலுத்துவோம்!

— அமிர்தலிங்கம்

"தமிழ் தேசிய இனம் இறுதியாக சென்றடைய வேண்டியது சுதந்திரத்தமிழ் ஈழம் எனும் இலட்சிய பூமிதான் என்று தந்தை செல்வா நமக்கு சுட்டிக்காட்டியிருக்கிறார். அடிமைத்தனம் எனும் கடலில் தத்தளிக்கும் தமிழ் மக்கள் அந்த இலட்சிய பூமியை — பத்திரமாக சென்றடைவதற்கு தமிழர் விடுதலைக்கூட்டணியெனும் ஒற்றுமைக் கப்பலையும் அவர் உருவாக்கித்தந்திருக்கிறார். கப்பலைப் பத்திரமாகவும் சரியான திசையிலும் செலுத்தி—கப்பலுக்கும் கப்பலில் பயணம் செய்யும் தமிழ் மக்களுக்கும் அதிக சேதம் ஏற்படாத வண்ணம் மிகவும் எச்சரிக்கையுடனும் நிதானமாகவும் ஓட்டிச் செல்லவேண்டிய பாரியபொறுப்பை தமிழ் சமுதாயம் நம்பிக்கையுடன் எம்மிடத்தில் ஒப்படைத்துள்ளது. சுதந்திரத் தமிழ் ஈழம் எனும் கரையை நோக்கி, கூட்டணி என்ற கப்பலை செலுத்த வேண்டிய மாலுமிகளாக நாங்கள் இருக்கிறோம். கப்பலுக்கும், கப்பலில் பயணம் செய்பவர்களுக்கும் ஏற்படக் கூடிய ஆபத்துக்களை உணர்ந்து அவற்றை தந்திரமாக கடந்து சென்று சுதந்திர ஈழம் எனும் கரையை அடைந்தே தீருவோம்! இதை தந்தை செல்வா மீது ஆணையிட்டு இங்கே உறுதியுடன் கூறிவைக்க விரும்புகிறேன்"

இவ்வாறு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் 31-3-78 வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்ற அமரர் மூதறிஞர் தந்தை செல்வா அவர்களின் 80 வயது நிறைவு விழாவில் பேசிய தமிழினத் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

இவ்விழாவை தந்தை செல்வா அறங்காவல் குழு ஏற்பாடு செய்திருந்தது. விழாவுக்கு அறங்காவல் குழுத்தலைவர் திரு.நேசையா தலைமை தாங்கினர். திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:—

தந்தை செல்வாவுடன் முப்பது ஆண்டுகள் நெருங்கிப் பழகி அவரிடமிருந்து நான் கற்றுக் கொண்டவை ஏராளம். அவர் தோல்வியை கண்டு துவள்பவருமல்ல; வெற்றியைக்கண்டு வெறி கொண்டலைபவருமல்ல; சத்திய வழியில், நேர்மையான அரசியலைநடத்தி, தமிழ் சமுதாயத்துக்காக தன்னை அர்ப்பணித்த தீர்க்கதரிசி தந்தை செல்வா, அவரை நான் 18 வயது மாணவனாக இருந்த போது சந்தித்தேன் முதன் முதலாக; அப்போது அவர் எனக்குச் செய்த முதல் உபதேசம், "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே"என்பது தான்! 1977 பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணிக்குகிடைத்த இமாலய வெற்றிக்கு காரணம் தந்தை செல்வாவின் ஆத்மீக சக்தியே.

சிங்களவர்கள் மத்தியில் சுயநலமற்ற, மதியூகம் படைத்ததலைவர்கள் தோன்றாத காரணத்தினால் தந்தை செல்வா அவர்கள் முன் வைத்த சமஷ்டிக் கோரிக்கையை அவர்கள் ஏற்க மறுத்தனர். இதனால் இறுதி இலட்சியமாக, தமிழினம் வாழ்வதற்கு இதைத்தவிர வேறுவழியில்லையென்ற நிலையில் தந்தை செல்வா தனிநாடு இலட்சியத்தை ஏற்று அதையே தமிழினத்தின் மாற்ற முடியாத இறுதி இலட்சியமாக பிரகடனப் படுத்தினர். 1972ம் ஆண்டு தமிழரசுக்கட்சி அரசியலமைப்பு நிர்ணய சபையிலிருந்து வெளியேறிய பின்னர், கூட்டணி ஆரம்பிப்பதற்கு முன்னர் தநதை செல்வா இந்தியத்தமிழகம் சென்றிருந்தபோதே 'தனிநாடு' பற்றி பேசத்தொடங்கி விட்டார்.

மகாத்மா காந்தியடிகள் அஹிம்சைவழியில் போராடினலும் கூட, வன்முறையில் விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட சுகதேவ், பகத்சிங் போன்றவீரர்களுக்காகவும் வாதாடத் தவறவில்லை. தாம் அஹிம்சை வழியில் போராடினலும் வன்முறைகள் தலைதூக்கும் என்பதை மகாத்மா அறிந்திருந்தது போலவே, ஈழத்திலும் தந்தை செல்வா அஹிம்சை வழியை ஏற்ருலும் கூட, பலாதகார போராட்டங்கள் நிகழ்வதை தவிர்க்க முடியாதென்பதையும் உணர்ந்திருந்தார். ஒரு சுதந்திர நாட்டை காப்பாற்ற—அதன் எல்லைப் பிரதேசங்களை காப்பாற்ற—அந்த நாட்டு மக்களைப் பாதுகாக்க — படைபலம் வேண்டும் என்பதை நாம் மறுக்க முடியாது."

கூட்டணி செயலதிபர்களில் ஒருவரும் நல்லூர் பா. உ.வுமான திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது!

"1972ம் ஆண்டுவரை நான் தந்தை செல்வாவுக்கு எதிரணியில் இருந்தவன் என்றலும், அவருடைய நேர்மையையும் மதித்தே வந்தேன். தமிழினத்தின் ஒற்றுமையை கட்டியெழுப்பியவர் தந்தை செல்வா. இந்த ஒற்றுமையை உருவாக்குவதற்காக தம்முடன் அரசியலில் எதிரும் புதிருமாக இருந்த அமரர் ஜி, ஜீ. அவர்களின் வீட்டுக்கு தாமாகவே சென்று ஜீ.ஜீ.யுடன் கலந்து பேசி, கூட்டணியை உருவாக்கியவர் தந்தைசெல்வா, அவர் உருவாக்கிய இந்த தமிழின ஒற்றுமைமை — கூட்டணியை — பிளவுபடுத்த இன்று சிலர் சதி முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் கட்சி அரசியலை மறந்து, இலட்சிய அடிப்படையில் இணைந்துவிடுதலைப் பாதையில் செல்லும் தமிழ் மக்களை மீண்டும் தங்கள் சுயநலத்துக்காக கட்சி அடிப்படையில் பிரித்துக் கூறுபோட சுயநலக்கும்பல் ஒன்று முயற்சித்துக்கொண்டேயிருக்கிறது. இவர்களை இனங்கண்டு முறியடித்தே திருவோம்!

## 'இன ஒற்றுமையை எப்படியும் கட்டிக் காப்போம்!"

— சிவசிதம்பரம்

தந்தைசெல்வா அவர்களையும் தமிழ் ஈழ இலட்சியத்தையும் நாம் ஒருபோதும் ஒரு நிமிடமும் கூட மறந்துவிடமாட்டோம். தந்தை கண்ட கனவான சுதந்திர ஈழத்தை அமைத்தே திருவோம். தமிழர்களை தாக்கி கொன்று குவித்து பயமுறுத்துவதன் மூலம். தமிழ் இனத்தின் உறுதியை குலைத்து சுதந்திர இலட்சியத்திலிருந்து அவர்களை பின்வாங்கச் செய்து விடலாம் என்ற நோக்கத்துடனேயே ஆவணியில் தமிழினக் கொலையில் சிங்கள ஏகாதிபத்திய வெறியர்கள் ஈடுபட்டனர்! ஆனல் அவர்கள் எதிர்பாத்ததற்கு மாருக இனக்கலவரத்தின் மீண்டும் நிலைநாட்ட வேண்டும் என்ற ஆவேசமும் கொண்ட ஒரு சமுதாயமாக மறுமலர்ச்சியடைந்திருந்ததென்றல் — அங்கே தந்தை செல்வா ஆற்றிய பணியின் விளைவைக்காணுகிறோம் —

பின்னர். சுதந்திரத் தமிழ் ஈழம் அமைத்திடும் கொள்கைக்கு தமிழ் மக்களிடையே ஆதரவு திரண்டுள்ளது.

சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன் பேசுகையில் கூறியதாவது!

400 ஆண்டுகாலம் அடிமைச் சேற்றுள் சிக்கித்தவித்த தமிழ் சமுதாயத்தை கைதூக்கி விட வந்துதித்தவர் தந்தை செல்வா அவர் பிறந்தபோது அடிமைத் தனத்துள் மூழ்கி, தனது இனத்தின் பெருமையையும் வரலாற்றையும் பண்பாட்டையும் மறந்திருந்த ஈழத் தமிழர்கள், அவர் மறைந்த போது இன எழுச்சியும் சுதந்திர வேட்கையும் இழந்த தமிழ் ஈழ அரசுரிமையை

## செல்வா பிறந்த நாள்

## விழாவில் தலைவர்கள் சபதம்

நெஞ்சில் உறுதியும் நேர்மைத் திறனும் கொண்ட தந்தை செல்வா அரசியலிலும் சரி, சொந்த வாழ்விலும் சரி உள்ளத்தாற் பொய்யாதொழுகியவர். அவரது சொல்லுக்கும் செயலுக்கும் இடைவெளி இருந்ததில்லை. இதனல் தான் 30 ஆண்டுகளாக அவர் தமிழ் சமுதாயத்தின் தலைவராக விளங்கமுடிந்தது.

"தந்தை செல்வர மிக அதிகமாக கிழக்கு மாகாண தமிழ்மக்களையேநேசித்தார். கிழக்குமாகாண மக்களுக்கு ஒரு துன்பமென்றல் உடனே ஓடிச்சென்று உதவி செய்தார். சேவையின் மூலம்கிழக்கையும்வடக்கையும் இணைத்தார். கிழக்கு மாகாணத்திலுள்ள குக்கிராமங்களுக்கெல்லாம் சென்று அங்குள்ள கிராம மக்களுடன் அவர்களுடைய குடிசைகளிலே தங்கியிருந்து அவர்களுடைய ஓலைப்பாயிலேபடுத்துறங்கி, சாதாரண மக்களுடன் பழகி எளிமை வாழ்வு வாழ்ந்து இனத்தை ஒன்றுபடுத்தியவர். தந்தையின் இந்த எளிமை வாழ்வைப் பின்பற்றி, கிழக்கு மாகாண மக்களை இறுகத்தழுவிக் கொள்ள வேண்டியது கூட்டணியின் இன்றைய தலைவர்களின் கடமையாகும்.

தந்தை செல்வா நமக்கு இறுதியாக தந்துவிட்டுச் சென்ற கட்டளை விட்டுச் சென்ற மரணசாசனம், தனி நாடு அமைத்திட வேண்டுமென்பதே. தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை என்பதை உணர்ந்து அவர் வழி செல்வோம்!"

முன்னள் மூதவை உறுப்பினர் சு, நடராசா பேசுகையில்—மிகவும் அழுத்தமான கடவுள் நம்பிக்கைகொண்டவர் தந்தை செல்வா; ஓடும் ரயிலில் கூட, முழந்தாளிட்டு இறைவனை வணங்குபவர் தந்தைசெல்வா. இத்தகைய தெய்வநம்பிக்கையும், ஆத்மீக சக்தியே தந்தை செல்வாவின் வெற்றிகளுக்கு காரணமாக இருந்தது என்ருர்.

காவலூர் பா. உ. திரு. கா. பொ. இரத்தினம் பேசுகையில் — வள்ளுவருடைய குறள் காட்டும் நெறிகளுக்கு இலக்கியமாக அமைந்தது தந்தை செல்வாவினுடைய வாழ்க்கையென்றும், எந்த தமிழ் காங்கிரசிலிருந்து 1949 பிரிந்து சென்ருரோ அதே தமிழ் காங்கிரசை 1972ல் மீண்டும் இணைத்து இன ஒற்றுமையை இலட்சிய அடிப்படையில் உருவாக்கியவர் தந்தை செல்வா என்றும் தெரிவித்தார்.

பருத்தித்துறை பா. உ. திரு. க. துரைரத்தினம் பேசுகையில்—தந்தை செல்வா கொள்கையில் பிடிவாதமும் உறுதிதளராத நிலையும் கொண்டிருந்தாரென்ருர். தந்தை செல்வாவின் வழியில்

—4-ம் பக்கம் பார்க்க

## வடக்கில் பனைவளச்சபை உருவாகிறது!

பனம்பொருள் அபிவிருத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன் வடமாகாணத்தில் ஒரு கோடி ரூபா முதலீட்டில் பனைவளச்சபை ஒன்றை நிறுவ அரசாங்கம் முடிவு செய்துள்ளது, இப்படியொரு பனம்பொருள் அபிவிருத்தி சபையை நிறுவி, பனந்தொழிலை ஊக்விக்குமாறு கூட்டணி பா.உ.க்கள் நெடுங்காலமாக வலியுறுத்திவந்திருப்பது தெரிந்ததே, பனம்பொருள் அபிவிருத்தி நிபுணர் ஒருவரை இந்தியாவிலிருந்து தருவித்து இச்சபையின் தலைவராக நியமிக்கவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொம்யூனிஸ்ட் மாநாடும் தமிழினப் பிரச்சினையும்!

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் (ரஷ்ய சார்பு) 10 வது தேசிய மகாநாட்டு அரசியல் அறிக்கையை தமிழ் தேசிய இனத்தவராகிய நாம் அவசியம் ஆராய்தல் வேண்டும். அக்கட்சியின் மாநாட்டு அறிக்கையில் பல்வேறு பிரச்சினைகளும் ஆராயப்பட்டு இறுதியாக மேடு பள்ளம் விட்டுப்பூசி மெழுகியிருக்கிருர்கள். தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினையை ஆம்! இரு தேசிய இனங்களுச்கு இடையே உள்ள பிரச்சினையை தமிழ் ஈழம் மீட்புப் போராட்டம் ஆரம்பித்திருக்கும் இந்தநேரத்தில் அது ஒரு சர்வதேசப் பிரச்சினையாக அண்மித்துக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் — இரு இனக்கலவரங்கள் முடிந்து விட்ட நிலையில் குருட்டுத்தனமாக அறிக்கையில் ஆராய்ந்துள்ளனர்.

நோயாளி ஒருவன் உணவை உண்பதற்கும் விடுவதற்கும் முடியாத நிலையில் அருவருப்புடன் முழுசாக விழுங்கிப் பின்னர் வாந்தி எடுத்த உணவு எவ்வாறு திவலை திவலையாக இருக்குமோ அவ்வாறுதான் இருக்கிறது கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை—தமிழர் பிரச்சினையில் தமிழினத்தின் பிரச்சினையை அருவருப்புடன் ஆராய்ந்து சில உரிமைகளை மன விருப்போடு ஏற்காமல் ஒப்புக்காக ஒப்புக்கொண்டுள்ளனர் கம்யூனிஸ்ட் கட்சியினர்.

தேசிய இனங்களின் பிரச்சினையை வெற்றிகரமாகச் சிறப்பாகத் தீர்த்து வைத்திருக்கும் ரஷ்யாவின் சார்புள்ள இக்கட்சி தமிழ் தேசிய இனத்தைச் "சிறுபான்மையினர்" என்று தலையங்கம் தீட்டுவது அவமானமாகும். கம்யூனிசத்தின் லெனினிஸக் கோட்பாடுகளை மறந்தோ மறைத்தோ ஒற்றை ஆட்சியின் கீழ் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கின்ருேம் என்று பேசுவது யாரைஏமாற்ற? சிறைக்குள்ளே ஒரு சுதந்திரமா?

அரசியல் அமைப்பில் ஒற்றை ஆட்சியின் கீழ் பிரதேச சுயாட்சியை அங்கீகரிப்பது தான் தமிழ் தேசிய இனத்தின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான மார்க்கமா? சமதர்மம் பூத்துக்குலுங்கும் சோவியத்தின் யாப்பில் என்ன இருக்கிறது? அங்கே சமபலம் உள்ள இரண்டு சபைகளில் ஒன்று இனங்களின் சபை என்பதும் அச்சபையில் தேசிய இனங்கள் ஒன்றை ஒன்று நசுக்காத விதமான சம பலபிரதிநிதித்துவம் உண்டு என்பதையும் அறியமாட்டார்களா? அது மட்டுமல்ல அங்கு ஒற்றை ஆட்சியல்லாத பல இனங்களை இணைத்து வைத்த இணைப்பாட்சி உண்டு என்பதையும் மறந்தீர்களா? அவ்வாருன அரசியல் அமைப்பு இலங்கைக்கு ஏன் கூடாது? கம்யூனிஸ்ட் கட்சியின் பேரினவாதம் இங்கே அம்பலமாகுகின்றது.

"பக்குவப்பட்ட பருவப் பெண்" என்பதை ஏற்காமல் மலட்டுப் பெண் என்று தலையங்கம் கொடுத்து அவளுக்கு குழந்தை பெறும் உரிமை உண்டு என்று கூறினல் எப்படி இருக்கும்?

அவ்வாறு தான் தமிழினம் ஒருதனித்தேசிய இனம் என்று ஏற்காமல் வெறும் சிறுபான்மையினர் என்று கூறும் கம்யூனிஸ்ட் கட்சி

## ● ஒரு கண்ணோட்டம்

தமிழ் மக்கள் சம்பந்தமாக நாம் சுயநிர்ணயத்துக்கு அங்கீகாரம் தருகிருேம் என்றுகூறுவதாகும். மேலும் ஒற்றை ஆட்சியின் கீழ்தான் தமிழர் வாழ வேண்டுமாம்! ஜே. ஆர். சோசலிசம் பேசினுல் எவ்வாறு இருக்குமோ அவ்வாறு தான் கம்யூனிஸ்ட் கட்சி சுயநிர்ணய உரிமைபற்றிப் பேசுவது அர்த்தமற்றுவிட்டது.

மார்ஸிஸக் கோட்பாடுகளின் படி ஒரு தனித் தேசிய இனத்திற்குத்தான் சுயநிர்ணய உரிமையுண்டு. அவர்கள்தான் பிரிந்து செல்லவும் முடியும். ஒரு தனித்தேசிய இனம் பிரிந்து சென்று வாழ்வதற்கான பொருளாதார அமைப்பு உண்டு என்பது வெளிப்படை. தமிழ் ஈழம் பிரிவது யதார்த்தமற்றது என்று கம்யூனிஸ் கட்சி கூறுவது ஏன்?

தமிழ் ஈழ மீட்புக்கோரிக்கையைப் பிரிவினைக் கோரிக்கை என்று வர்ணிப்பது ஏன்? கம்யூனிஸ்ட்டுகளுக்கு வரலாறு தெரியாதா? 'பக்தா இது பூலோகம்' என்று இப்போது தான் வந்து இறங்கியிருக்கிருர்களா? 'சிறுபான்மையினர்' என்று தலையங்கம் திட்டினீர்கள் அது மன்னிக்க முடியாதுதான். இருந்தாலும் அவ்இனங்களின் வரலாறு பற்றியாகுதல் கூற முற்படாதது ஏன்? இனங்களின் தனித்தன்மை அங்கீகரிக்கப்பட்டு தனி இராஜ்சியங்கள் அமைந்திருந்த காலத்தில் தான்—ஆக்கிரமிப்பு இல்லாத காலங்களில் தான் இலங்கை முன்னேறியிருந்தது என்ற வரலாறுப் பாடம் தெரியாதா?

சிங்களமக்களின் சந்தேகங்களைப் போக்க கம்யூனிஸ்ட் கட்சி படாதபாடு பட்டிருப்பது பரிதாபமாகவும் தமிழினத்திற்குப் பாதகமாகவும் இருக்கிறது. சுயாட்சிப் பிரதேசங்களில் சிங்கள மக்களின் உரிமைகள் தெளிவாக்கப்பட்டுள்ளது. அது போன்று சிங்களப்பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்களின் உரிமைகள் எவ்வாறு இருத்தல் வேண்டுமென்பது தெளிவாக்கப்படவில்லை.

—இறைவன்

# கோப்பாய்த் தொகுதியில் இதுவரை அமைக்கப்பட்ட 12 பாசறைகள்

கோப்பாய்த் தொகுதியில் 24 கிளைகளை அமைப்புச் செயலாளர் ஆறுமுகம் வேலுப்பிள்ளை தமிழரசு க. சின்னத்துரை, சட்டத்தரணி ச. லோகீஸ்வரன் ஆகியோர் கொண்ட குழு புனரமைப்புச் செய்து கொண்டிருக்கின்ருர்கள். இக் கிளைகளின் நிர்வாகம், ஆக்கவியல், போராட்டம் பற்றிய உரைகளைச் சிந்தனைச்சிற்பி சி. கதிரவேற்பிள்ளை பா. உ, அமைப்புக் குழு, மற்றும் கூட்டணிப் பிரமுகர்கள் பலர் எடுத்துரைத்த வண்ணம் தினமும் இம் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இக் கிளைகளில் 10 விடுதலைக் கூட்டணி நிர்வாகிகளும், 5 இளைஞர் பேரவை நிர்வாகிகளும், 5 மாதர் பேரவை நிர்வாகிகளும் தெரிந்தெடுக்கப்படுகின்றனர்.

இம்மாதமுடிவில் கோப்பாய்த் தொகுதி மத்தியகுழு தெரியப்படவிருக்கின்றது என அமைப்புச் செயலாளர் அறிவிக்கின்ருர். இம் மத்திய குழுவிற்கு 5 விடுதலை இயக்க உறுப்பினரும், 5இளைஞர் பேரவை உறுப்பினரும், 5 மாதர் பேரவை உறுப்பினரும் இவ் 25கிளைகளின் தொகுப்பிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டு மத்தியகுழு நிர்வாகிகள் ஆவர்.

இதுவரை கோப்பாய்த் தொகுதியில் அமைக்கப்பட்ட 12 கிளைகளின் விபரம் வருமாறு:-

சிறுப்பிட்டி.

தலைவர் க. பத்மநாதன், துணைத்தலைவர் க: கதிரிப்பிள்ளை, செயலாளர் ஆ. வேலுப்பிள்ளை, துணைச்செயலாளர் அ. கந்தசாமி, பொருளாளர் அ. சின்னத்துரை, இளைஞர்பேரவை செயலாளர் ஆ. வேலுப்பிள்ளை.

புத்தூர் கிழக்கு.

தலைவர் வி.செல்லத்துரை, துணைத்தலைவர் த. ஆனந்தன், செயலாளர் ச. துரைசிங்கம், துணைச்செயலாளர் ச. லோகீஸ்வரன், பொருளாளர் செ. பத்மநாதன், இளைஞர் பேரவை செயலாளர் நா. செல்வம்.

ஆவரங்கால்.

தலைவர் க. சின்னத்துரை, துணைத்தலையர் சி. அரியகுட்டி, செயலாளர் தி. கமலநாதன், பொருளாளர் செ. சுப்பிரமணியம், த. இ. பேரவை செயலாளர் க. திரவியம்.

புத்தூர் மேற்கு.

தலைவர் மு. திருநாவுக்கரசு, துணைத்தலைவர் க. மதியாபரணம், செயலாளர் வீ. இராயேந்திரம், துணை செயலாளர் இ. தருமலிங்கம், இளைஞர்பேரவை செயலாளர் இ. தங்கராசா, பொருளாளர், பெ. சிதம்பரப்பிள்ளை.

அச்சுவேலி தெற்கு.

தலைவர் எஸ். பி. நவரத்தினம், துணைத்தலைவர் நா. அருள்நந்தி செயலாளர் கு. கணேஸ். துணைச்செயலாளர் சு. யோகநாதன், பொருளாளர் க. பேரின்பநாயகம், இளைஞர்பேரவை செயலாளர் சி. விமலச்சந்திரன்.

வாதரவத்தை.

தலைவர் மா. இரத்தினசிங்கம், துணைத்தலைவர் ஐ. சின்னராசா, செயலாளர் இ. கந்தசாமி, துணைச்செயலாளர் சு. சுந்தரராசா, பொருளாளர் இ. யோகராசா, தமிழ் இளைஞர்பேரவை செயலாளர் சு. இரத்தினகுமார்.

இடைக்காடு.

தலைவர் சி. கந்தசாமி, துணைத்தலைவர் ச. சக்திவேல், செயலாளர் க: வேல்முருகு, துணைசெயலாளர் நா. இடைக்காடர் ஈஸ்வரன், பொருளாளர் க. குலசிங்கம், இளைஞர்பேரவை செயலாளர்— மு. ஈஸ்வரமூர்த்தி.

நவக்கிரி.

தலைவர் பாரூ பொன்னம்பலம், துணைத்தலைவர் மூ. இராசையா, செயலாளர் ஆ. நடராசா, துணைச்செயலாளர் சி. சுந்தரலிங்கம், பொருளாளர் இ. செல்லத்துரை, இளைஞர் பேரவை செயலாளர் த. ஜெயக்குமார்.

கோப்பாய் வடக்கு.

தலைவர் வெ. சுப்பிரமணியம், துணைத்தலைவர் வ. சற்குணசிங்கம், செயலாளர் தி. அரசபிள்ளை, துணைச்செயலாளர் ச. நவரத்தினம், பொருளாளர் க. தருமலிங்கம், இளைஞர் பேரவை செயலாளர்— [illegible]

நீர்வேலி வடக்கு.

தலைவர் இ. தவராசா, துணைத்தலைவர் சி. அருந்தவநாதன், செயலாளர் கி. சச்சிதானந்தம், துணைச்செயலாளர் சி. தங்கராசா. பொருளாளர் இ. அப்பாத்துரை தமிழ் இளைஞர்பேரவை செயலாளர் செ. மகேந்திரன்.

கோப்பாய் தெற்கு.

தலைவர் செ. சபாரத்தினம், துணைத்தலைவர் சி. நகுலேஸ்வரர் செயலாளர்- செ. குணரத்தினம், துணைச் செயலாளர். கி. சின்னராசா, பொருளாளர் க. சங்கரப்பிள்ளை, இளைஞர் பேரவை செயலாளர் க. ஜெயரத்தினம்.

தம்பாலை—கதிரிப்பாய்.

தலைவர் சி. நடராசா, துணைத்தலைவர் ச. தவராசா, செயலாளர் கி. தியாகராசா, துணைச்செயலாளர் செ. தருமராசா, பொருளாளர் இ. சிவம், இளைஞர்பேரவை செயலாளர் வே. பாலசோதி.

# பாலா தம்பு ஞானம்பிறக்கிறதா

"கடந்த 1977ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற வன்செயல்களால் தமிழ் மக்கள் மிகவும்பாதிக்கப்பட்டார்கள். திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன உடன் நடவடிக்கை எடுத்திருந்தால் வன்செயல்களை பரவாது தடுத்திருக்க முடியும். அந்தச் சந்தர்பத்தில் வடகிழக்குப் பகுதியில் உள்ள தொழிலாளர்கள்ஒன்று சேர்ந்து ஒரு பொது வேலை நிறுத்தத்தை செய்து பாதிப்பை ஏற்படுத்தியிருந்தால்ஜேஆர் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு கலவரத்தை அடக்கியிருப்பார் என்று கருதுகிறேன்" (ஈழநாடு 22-3-78)

அவரிடம் நாம்ஒன்று கேட்கிருேம்

சிங்களத் தொழிலாளருடன் சேர்ந்துநின்றுபோராடித்தான் தமிழரும் உரிமை பெறலாம்என்று சித்தாந்தம் பேசிய காலம் போய் விட்டதா? தமிழரைக் காப்பாற்ற நாம் மொழிவழித் தொழிற்சங்கங்களில் ஒன்று சேருவதுதான் ஒரேவழி என்பதை ஏற்றுக்கொள்கிறீர்களா?

—ஐயன்
அளவெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே. ஆர். போடும் தூண்டிலே

# மாவட்ட மந்திரி பதவி!

## இதையறியாதவர்களல்ல எம் தலைவர்கள்! சுயநல 'மீன்களே' அந்த தூண்டிலில் சிக்கும்!

கொழும்பு மேற்குத் தொகுதியின் தேர்தல் முடிந்ததும் மாவட்ட மந்திரி பதவிகள் வழங்கப்படும் என்ற வதந்திகளினால், இந்த விடயத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி எப்படி நடந்து கொள்ளும் என்ற கருத்துப்பற்றி பலதரப்பட்ட அபிப்பிராயங்கள் பரவி வருகின்றது.

1978ம் ஆண்டு தைமாதம் மாவட்ட மந்திரிபதவி வழங்கலும். மந்திரி சபை மாற்றி அமைத்தலும் இடம்பெறும் என ஜே. ஆர். சென்ற ஆண்டில் கூறியிருந்தார். இதற்குக்காரணம் தமிழர் விடுதலைக் கூட்டணி மந்திரிப்பதவிக்கு விரும்பி தம்முடன் கூட்டுச்சேரும்; அப்போது வெளிநாடுகளின் முன் சிறீலங்கா அரசு சிறுபான்மை இனத்தவரான தமிழரின் ஒரேகுரலான தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் சேர்ந்து பாரபட்சமற்ற அரசு நடாத்துகின்றது; வெளிநாடுகளில் நடைபெறும் ஆர்பாட்டங்களில் உண்மையில்லை; தமது அரசு ஓர் தார்மீகவாதி என்ற பெயரினைப் பெறலாம் என்ற நப்பாசையாக இருந்திருக்கலாம். பின்னர் கூட்டணியின் போக்கில் மாற்றமில்லையென்றறிந்த ஜே. ஆர். மந்திரி சபையை மாற்றுவது என்ற எண்ணத்தைக் கைவிட்டிருக்கலாம்.

இப்பொழுது தொடர்ந்தும் மாவட்ட மந்தி(ரி) பதவிக்கு அதிக அதிகாரங்கள் என்று கூறிக்கொண்டு ஒரு தூண்டிலைப் போட்டு தூங்கிக்கொண்டு இருக்கின்றார். நிஜமாக தூங்கிக்கொண்டுதான் இருக்கின்றார் இல்லாவிடில் ஜனவரிமாதம் வழங்கவிருந்த மாவட்ட மந்தி(ரி) பதவிகளை ஏன் இன்னும் வழங்கவில்லை?

தார்மீக ஆட்சி என்று தனக்குத்தானே முத்திரையைக் குத்திக் கொண்டு உலகக் கண்ணோட்டத்தை திருப்ப முயற்சிக்கும் சர்வாதிகாரி, போட்டிருக்கும் தூண்டிலின் தடி(பிடி)யை தன் கையில் வைத்துக்கொண்டு தூண்டிலில் நல்ல உணவிருக்கின்றது வாருங்கள் வந்து உண்ணுங்கள் என்று த.வி.கூ. தேசியப் பேரவை (பாராளுமன்ற)உறுப்பினர்களை விருந்துக்கு அழைக்கின்றார். விழுவார்களா கூட்டணி தே.பே. உறுப்பினர்கள்?

இந்த மாவட்ட மந்தி(ரி) பதவி அதற்கு அதிக அதிகாரங்கள் என்ற இராஜ தந்திரம், பழுத்த அரசியல்சாணக்கியரான அதுவும் பலமுறை தமிழினத்துக்கு உரிமைகள் கிடைக்க இருந்த நேரங்களில் பாதயாத்திரையும் எதிர்ப்புக் கோசங்களும் எழுப்பிய ஜே. ஆருக்கு வந்ததென்றால் அதன் மர்மம் என்னவென உணர வேண்டாமா? தமிழனுக்கு உரிமையென்றால் சுத்தசூனியமாக கருதும ஜே. ஆர்., தமிழினம் சேயை இழந்து தாய்மாரும்; கற்பை இழந்து கன்னியரும், கணவரை இழந்து விதவைகளும் சொத்து சுகம் யாவற்றையும் இழந்து தம்முயிருக்காக காடுகளிலும் மேடுகளிலும் மலசல கூடங்களிலும் வடிகால்களிலும் ஒதுங்கி உயிரிருந்தும் பிணங்களாக இருந்த அந்த நேரத்தில் (1977 ஆகஸ்ட்) கிஞ்சித்தேனும் இரக்கமின்றி "போர் என்றால் போர்" என்று கூறியதன் மூலம் காடையருக்கும் தன்காவல் படைக்கும் உசார் படுத்திய ஜே. ஆர். இப்படியொரு தூண்டிலைப் போட்டிருக்கின்றார் என்றால் நிச்சயமாக அவருக்கு ஏதோ ஒரு தாக்கம் ஏற்பட்டிருக்கின்றது என்பது வெளிப்படை; இது ஏதோ தந்திரம் என்பதும் சுந்தரமாக தெரிகின்றது.

இவருக்கு இப்போது ஏற்பட்ட இந்த தாக்கம், நிச்சயமாக ஐ. தே. கட்சி ஆட்சி அமைத்த பின்னர் கூட்டணி நடத்தியபோராட்டத்தினால் அல்ல; அண்மைக் காலமாக தமிழர் விடுதலைக் கூட்டணி எந்தப் போராட்டத்தையும் நடத்தவில்லை. எனவே எங்கிருந்து இந்த தாக்கம் ஏற்பட்டிருக்கலாம் எனில், எதிர்கட்சித்தலைவர் வெளிநாட்டு அரசியல் தலைவர்களுக்கு எம்மிலட்சியத்தை எடுத்துரைத்து வருவதாலும் வெளிநாடுகளிலிருக்கும் எமது இளைஞர்கள் தமிழீழ விடுதலைக்காக நடத்தும் போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களினாலும், பத்திரிகைகள் பிரசுரங்கள் மூலம் எம் இறைமையை எடுத்து விளக்கிவருவதாலும் வெளிநாட்டுக்கவனத்தையும் உதவியையும் பெற்றுவருவதாலுமே!

வெளிநாடுகளிலிருந்து தமிழீழக் கோரிக்கைக்கு ஆதரவு கிடைத்துவிட்டால் தான் நினைத்தபடி தமிழை தமிழனை, தமிழீழத்திலிருந்து வேரோடழிக்க மும்மொழித் திட்டமல்ல எவ்வழித் திட்டமானாலும் முடியாது என்ற ஓரே எண்ணமே என்பது பலவருட அரசியல் ஞானமுள்ள எம்தலைவர்களுக்கு விளங்காமலிருக்காது.

ஒரு சில கூட்டணி ஆதரவாளர்கள் மத்தியில் மாவட்ட மந்திரி பதவியைப் பெற்றால் தொகுதிக்கு முன்னேற்றமும் கிடைக்கும்; எனவே இதையும் ஏற்றுக்கொண்டு தமிழீழக் கோரிக்கைக்காகவும் போரிட்டால் என்ன என்றும். இன்னும் சிலர் கூட்டணி தேசியப் பேரவை உறுப்பினர்கள் மாவட்ட மந்திரிப்பதவிகளை ஏற்காவிட்டால் ஐ. தே. கட்சி அமைப்பாளர்கள் அவற்றைத்தட்டிக்கொண்டு அதிகாரம் செய்யப் பார்ப்பார்கள் என்றும் பலதரப்பட்ட கருத்துக்கள் அபிப்பிராயங்கள் தோன்றுகின்றன.

நிம்மதியாக உறங்கவே முடியாமல் எந்த நேரமும் பீதியின் மத்தியில் வாழும் தமிழன் தனது தாயகத்தை மீட்க சிங்களச் சிறீலங்கா அரசை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தியிருக்கின்றான், அநீதியைக்கண்டுஆர்ப்பரித்தெழுகின்றான்; இந்தக் காலகட்டத்தில் அமைப்பாளர்களுக்கு அதிகாரங்கள் கூடிவிடுவதால் அதற்கு அடங்கிவிடுவானா? அதர்மம்கூடினால் தமிழன் "கீதை" யைப்புரட்டவேண்டியதுதானே.

அமைப்பாளர்கள் மாவட்ட மந்திரிப் பதவியைப் பெற்றுக் கொண்டால் அதன் மூலம் தமிழ்மக்கள் மத்தியில் சலுகைகளைச் செய்து கொடுத்துவிட்டு மறுமுறை தேசியப் பேரவை உறுப்பினர்களாக வந்துவிடுவார்கள் என்றகாரணத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு கூட்டணி தே. பே. உறுப்பினர்கள் வேறு ஏதாவது வேதாந்த சாக்குப்போக்குகளை தமிழர்மத்தியில் சொல்லிவிட்டு சிலவேளை பதவியை ஏற்க முன்வரலாம் எனசிலர் கற்பனை செய்கின்றார்கள்! தம்மைத் தமிழ் மக்கள் தேசியப் பேரவைக்கு தேர்ந்தெடுத்தது 6 ஆண்டுகளுக்குமட்டுமே என்பது தெரியாதவர்களா எமது உறுப்பினர்கள், அல்லாமலும் தமிழீழக் கொள்கையை முன்வைத்துத்தான் தெரிவு செய்யப்பட்டோமே தவிர தமிழர்களுக்கு சலுகை செய்தல்ல என்பதை மறந்தவர்களுமல்ல.

அற்ப சலுகைகளை அமைப்பாளர்கள் செய்தாலும் தமிழர் மத்தியில் ஏற்பட்டிருக்கும் சுதந்திர தாகம் தனிநாடு கிடைக்கும் வரை தீராது- சூரியனின்முன் விளக்குவைத்தது போன்றதே தமிழர் மத்தியில் இந்த அற்ப சலுகைகள்.

எனவே வெறும் சலுகைகளை தரும் மாவட்ட மந்திரி பதவியை பெற்று இயக்கத்திற்கு தடைபோட எம் தலைவர்கள் நேற்று வந்த அரசியல் வாதிகளுமல்ல, தமிழர் இப்பொழுது என்னவேண்டி நிற்கின்றார்கள் சுதந்திரத் தமிழ் ஈழமா? சுயநலமா? என அறியாதவர்களுமல்ல, இந்த அற்ப சலுகையால் அதிகரித்து வரும் வெளிநாட்டு ஆதரவு குறையும் என்பதையும் வெளிநாடுகளில் போராடும் எம் இளைஞர்கள்வேகத்தைக் குறைக்கும் என்பதையும் தெரியாதவர்களுமல்ல.

எனவே ஜே. ஆரின் தூண்டிலில் நிச்சயமாக "விலாங்கு" மீன்தான் படும்- அதாவது பாம்புக்கு தலையும் மீனுக்கு வாலும் காட்டும் விலாங்கு மீனைப்போல தமிழ் மக்களுக்கு நான் உங்களுக்காக (தமிழருக்காக) போராடுவேன் என்று வாலைக்காட்டிக் கொண்டு சிங்களவர்களின் மத்தியில் நான் உங்கள் இனத்தவன் உங்களுக்குசார்பானவன் என்று தலையையும் காட்டிக் கொண்டுஇரண்டுக்கும் நடுவில் திரியும் சுயநலமிகளே விழுவார்கள்- என்பது வெளிப்படை.

—சி:த. இராஜா
மன்னகுளம், மாங்குளம்

## மறைவுக்கு அனுதாபம்

கொழும்பு சுடர் கலை இலக்கிய மன்ற தலைவர் திரு. க. இராஜமனோகரன் அவர்களின் மைத்துனரும் தமிழ் அபிமானியுமான, திரு. பொன்னம்பலம் (சிவா) அவர்கள் அண்மையில் இயற்கை எய்தினார்கள். மைத்துனரின் பிரிவால் துயருறும் திரு. இராஜமனோகரன் அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் கொழும்பு சுடர் கலை இலக்கிய மன்ற உறுப்பினர்கள் தமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறார்கள்.

## சிங்களத் தேர்ச்சியில்லாதோருக்கு வேலையிலிருந்து சீட்டுக்கிழிக்கப்படுகிறது!

### 'தார்மீக' ஜே. ஆரின் இலட்சணம் பாரீர்!

பல வருடங்களாக விவசாயப்பணியில் ஈடுபட்டு வந்த விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர்கள் சிங்களத் தேர்ச்சியின்மை காரணமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டு வருகின்றனர். இவர்கள் நியமனம் பெறும் போது சிங்களத் தேர்ச்சி பெற வேண்டுமென நிபந்தனை விதிக்கப்படவில்லை. சுமார் பதினைந்து இருபது வருடகாலமாக தமிழ்ப்பகுதிகளில் கடமையாற்றிய இவர்களுக்கு தற்போது சிங்களத் தேர்ச்சி பெறவேண்டுமென 31ஆம் திகதியுடன் வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்தனர்.

அவர்களுடையவிடயமாக தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணியும், எதிர்க்கட்சி முதல்வரும் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக மேலும் 3மாத அவகாசம் கொடுக்கப்பட்டிருந்தது. அந்தக்கால எல்லையும்மார்ச் 31ஆம் திகதியுடன் முடிவடைவதால் யாழ்ப்பாணம் மன்னார், வவுனியா அரசாங்க அதிபர்களின் பகுதியிலுள்ள விவசாய விஸ்தரிப்பு சேவையாளர்கள் பலர் மீண்டும் வேலையை இழக்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது. இந்நாட்டின் விவசாய அபிவிருத்திக்காக உழைத்துவரும் இச்சேவையாளர்களை சிங்களத் தேர்ச்சியின்மை காரணமாக வேலையிலிருந்து நீக்குவதை தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணி வன்மையாகக் கண்டிக்கின்றது.

தமிழ்ப் பகுதியில் விவசாய அபிவிருத்தியில் ஈடுபட்டிருக்கும் இச் சேவையாளருக்கு எக்காரணம் கொண்டும் சிங்களத் தேர்ச்சி தேவையில்லை. இவர்கள் இவ்வாறு பழிவாங்கப்படுவது அநீதியானது. வயது வந்த இச் சேவையாளர்கள் சிங்களத் தேர்ச்சி பெற முடியாது. குடும்பக் கஷ்டங்களுடன் வாழ்ந்து வருகின்றனர். இந்நாடு விவசாயத் துறையில் முன்னேறவேண்டுமானால் இவர்கள் மீது திணிக்கப்பட்டிருக்கும் தேவையற்ற சிங்கள நிபந்தனைகளை அகற்றித் தொடர்ந்தும் அவர்களை சேவையில் வைத்திருக்குமாறு த. தொ. ச. கூட்டணி காணி விவசாய அமைச்சரையும், பிரதி [illegible]

சன்சயின்
சோப்
ஈழம் எங்கும் விற்பனையாகிறது
-இது ஓர் லாலா தயாரிப்பு-
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

● ஊரார் உரையாடல்

# செந்தமிழர் இயக்கம் யாருக்காக?

மணி:- என்ன, பேப்பரும் கையுமாய் உட்கார்ந்திருக்கிருய் என்ன புதினம்?

நாதன்:- ஒண்ணுமில்லையப்பா, 'நம்மட' வி.பி., இனப் பிரச்சினைக்குப் பிரிவினை தீர்வாகாது என்று கொழும்பில பேசியிருக்கிறதாக பத்திரிகையிலே கிடந்தது — அதைத்தான் பாத்திட்டு யோசிச்சுக் கொண்டிருக்கிறன்.

மணி:- எதை யோசிக்கிருய்? பிரிவினை கூடாது என்ரு?

நாதன்:- அட, அதெல்லப்பா—தமிழ்ஈழம் எங்கட உயிரோடு கலந்திட்டுது—தமிழ்ஈழத்தை தனியே பிரித்து அதைஒருசுதந்திரசமதர்மநாடாக்கவேணுமென்ற கொள்கையிலேயிருந்து நானும் என்னைப்போலஇளைஞர்களும்ஒருபோதும் திசைதிரும்பமாட்டம்—அதல்ல பிரிவினை கேட்கும் எங்கட கூட்டணி மேடைகளில பேசிவரும் வி.பி இப்போது பிரிவினை கூடாதென்று கூறியிருக்கிருரே அதைத்தான் யோசிச்சன்!

மணி:- வி.பி. எங்கட கூட்டணி மேடைகளில் பேசினுலும், தனிநாடு இலட்சியத்தை ஏற்கக்கூடிய மனப்பக்குவத்தை அவர் இன்னும்அடையவில்லை! பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய சுய நிர்ணய உரிமை இருக்கவேண்டும்; ஆனல் பிரியக்கூடாதென்கிருர்!

நாதன்:- ஒஹோஹோ, இப்படிச்சொல்லு — நாம முந்தி சமஷ்டி கேட்டோமில்லையா அந்த நிலையில் அவர் இப்போது இருக்கிருர் இல்லையா?

மணி:- அவர் சமஷ்டியில் சுயாட்சி கேட்கிருரா? அல்லது ஒற்றையாட்சி ஐக்கிய இலங்கையில் பிரதேச சுயாட்சி கோருகிருரா என்பது ஒண்ணுமே தெளிவில்லாம கருகலாத்தான் இந்தப் பிரச்சினையை வைச்சிருக்கிருர். ஆனு ஒண்ணு — பிரிவினையை ஏற்கின்றமன நிலையை இன்னும் அவர் அடையவில்லையென்பதுமட்டும் உண்மை! அதனுல்தான் கூட்டணியோட சேராமல் "செந்தமிழர் இயக்கம்" என்று ஒன்றை தொடக்கியிருக்கிருரே!

நாதன்:- ஆமப்பா, நானும் பேப்பரில பாத்தன்—சுதந்திரத்தமிழ் ஈழம்என்றஇறுதியான முடிந்தமுடிவை—தீர்க்கமான விடுதலை இலட்சியத்தை முன்வைத்துதமிழினம் ஒற்றுமையாகப் போராடும்போது, இப்படி புதியதொரு இயக்கம் தேவையா?

மணி:- நாதன், அவசரப்படாதை, வி.பி. யை போல தனிநாட்டுக் கொள்கையை ஏற்காமல்—தமிழினம் ஒரு தனித்தேசிய இனம்—அதற்கோர் தாயகமுண்டு—சுயநிர்ணய உரிமையுண்டு—என்கிற அளவில்மட்டுமேசிந்தித்துக் கொண்டிருப்பவர்கள் — முக்கியமாக சிங்கள ஆதிக்கமுள்ள இடதுசாரிக்கட்சிகளிலிருந்து மனமுடைந்து வெளியேறியவர்கள் — வெளியேற்றப்பட்டவர்கள்—இப்படிப் பட்டவர்களுக்கு தமிழ் ஈழ அரசியலில் ஒரு'தளம்', வேண்டுமல்லவா? அதற்காகவே இந்த' செந்தமிழர்இயக்கமே தவிர, தனிநாடு கொள்கையும் சமதர்மமும் உயிரோடும் ஊனேடும் கலந்திருக்கும் உனக்கும் எனக்கும் எம் போன்றேர்க்குமாக அல்ல; நமக்குத்தான் கூட்டணியும், தமிழ் இளைஞர் பேரவையும் உண்டே!

நாதன்:- சரிதான், இப்பஎனக்கு எல்லாம் புரியுது! இன்னுமொரு சிறு சந்தேகம்...?

மணி:- என்னது?

நாதன்:- தான் ஒருதமிழன் என்ற அடிப்படையில் பிரிவினையை எதிர்ப்பதாககூறுகிருர் வி. பி. நாங்கள் தமிழர்களாக இந்நாட்டில் பிறந்து விட்ட காரணத்தினுல் தானே இன்று பிரிவினைகேட்கவேண்டிய நிலையே தோன்றியிருக்கிறது!

மணி:- ஆமாம், இப்படி சிலபல முரண்பாடுகள் இருந்தாலும்—நமது அடிப்படையான சுதந்திரத் தமிழ் ஈழ இலட்சியத்திலிருந்து கிஞ்சிற்றும் அடிபிறழாமல் வி.பி. போன்றவர்களையும் இன விடுதலைக்காக எந்த அளவுக்கு பயன்படுத்த முடியுமோ, அந்த அளவுக்கு பயன்படுத்துவோம்! அதே சமயத்தில் நமது இலட்சியத்தை திசை திருப்பவோ, பலவீனப்படுத்தவோ,யாரையும்அனுமதிக்க மாட்டோம்—இப்போது திருப்திதானே!

—அஞ்சிறைத்தும்பி

## பனை ஓலைத் தொப்பி

100 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி மேற்படி அழகிய பனை ஓலைத் தொப்பியை பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

# செல்வா நிதி நல்லூர்த்தொகுதி முன்னணியில்

தந்தை செல்வா நினைவாலய நிதிக்கு நிதி வழங்குவதில் வடபகுதியிலுள்ள தொகுதிகளில் நல்லூர்த் தொகுதி மக்களே மற்ற எல்லாத் தொகுதிகளையும் விட முன்னணியில் நிற்கின்றனர். வண்ணை ஆனந்தனின் தலைமையில் நிதி திரட்டும் முயற்சி நல்லூர் தொகுதியில் விறுவிறுப்புடன் நடைபெற்று வருகிறது. வவுனியா மன்னர்.திருகோணமலை,மட்டக்களப்பு தொகுதிகளிலும் நிதி திரட்டப்பட்டுவருகிறது.

மட்டக்களப்பு பா; உ, திரு. செ. இராசதுரை தமது ஒரு மாதச்சம்பளத்தை (ரூபா 1001) செல்வா நினைவாலய நிதிக்கு வழங்குவதாக அறிவித்துள்ளார்.

## சுதந்திர தமிழ்..

—1-ம் பக்கத் தொடர்

வந்த நாம், இலட்சியத்தை எப்போதும் மறந்துவிடமாட்டோம்; நாம் ஆடினுலும் பாடினுலும், சிரித்தாலும். அதுவெல்லாம்வெறும் நடிப்பாக இருக்குமே தவிர, குறிக்கோளிலேயே எப்போதும் குறியாக இருப்போம் என்ருர்;

உடுப்பிட்டி பா. உ. திரு. சு. இராசலிங்கம் பேசுகையில் — சாதி, தீண்டாமைப் பிரச்சினைகளுக்கு எதிராக —அநீதிகளுக்கு விரோதமாக —செயற்பட்டவர் தந்தை செல்வா என்றும், அவர் வழியில் ஒரு சமதர்மத் தமிழ் ஈழத்தை அமைத்து அதிலே சமத்துவ வாழ்வு வாழ சிறுபான்மைத் தமிழ் மக்கள் உறுதி பூண்டுள்ளனர் என்றும், தமிழ் மக்களின் ஒற்றுமையை இனி எந்த சக்தியாலும் முறியடித்து விட முடியாதென்றும் குறிப்பிட்டார்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில் தந்தை செல்வா தமிழ்மக்களுக்காக கடவுளால் அனுப்பி வைக்கப்பட்ட தெய்வமனிதர் என்றும். தந்தை செல்வாவே தமிழினத்தை வாழ வைத்த தெய்வம் என்றும் குறிப்பிட்டார்.

மாவை சேனுதிராசா பேசுகையில்—தந்தை செல்வாவின் பொறுப்பை ஏற்று இன்று இனத்தை வழி நடத்துகின்ற அமிர்தலிங்கம் அண்ணன் அவர்கள் ஒரு சுபாஷ் சந்திரபோசாக, ஒரு ஸ்டாலினுக மாறவேண்டும் என்ற தமது ஆசையைத் தெரிவித்தார்.

வண்ணை ஆனந்தன் பேசுகையில் — தம்மை முழுமையாக அர்ப்பணித்ததன் மூலம். பிரிந்துபிளவுபட்டுக் கிடந்த தமிழ் இனத்தை இணைத்துவைத்தவர் தந்தை செல்வா என்ருர் தாம் சிறைசாலையிலிருந்த போது, துரையப்பா கொலை வழக்கில்சம்பந்தப்பட்ட இளைஞர் ஒருவரின் வேண்டுகோளை ஏற்று அவரைப்பார்க்க தந்தை செல்வா வெலிக்கடை சிறைச்சாலைக்கு வந்த காட்சியையும் வண்ணை ஆனந்தன் தமது பேச்சில் நினைவு கூர்ந்தார்.

ஆசிரியர் சகாப்தீன். தொழிற்சங்கக் கூட்டணி செயலாளர் ஐ. தி. சம்பந்தன், சட்டத்தரணி எஸ்.கே. மகேந்திரன் ஆகியோரும் பேசினுர்.

## மாதாஜி மறைவு

திருக்கோணமலை சிவானந்த தபோவனத்தின் தாபகரும் ஆத்மீக வழிகாட்டியுமான சுவாமி சிவானந்த சச்சிதானந்த சரஸ்வதி மாதாஜி அவர்கள் இறைவனடி சேர்ந்துவிட்டார். மாதாஜியின் மறைவு ஆத்மீகத் துறைக்கு ஒரு பேரிழப்பாகும். திவ்வியஜீவன சங்கத்தை நிறுவியவரும் மாதாஜி அவர்களே. மாதாஜியின் திருமேனி திருக்கோணமலையில் சமாதிவைக்கப்பட்டுள்ளது, அருட்தொண்டு, பொதுத்தொண்டு, சமுதாயத்தொண்டு, ஆத்மீகத்தொண்டு எனப் பலவாறு விரிந்துநின்ற மாதாஜியின் பணியை தொடருவதே அவருக்கு நாம் செய்யக்கூடிய அஞ்சலியாகும்.

—ஆர்.

# தந்தையின் பிறந்த நாளில் விளையாட்டுத்துறையிலும் தமிழே கோலோச்சியது

யாழ்ப்பாணக் குடா நாட்டில் இடம்பெறும் பெரும் போட்டிகளில் மிகவும் பிரபல்யம் பெற்றதும், நீடித்த வரலாற்றை உடையதுமான புனித யோவான்—யாழ் மத்திய கல்லூரிகளுக்கும் இடையே நடைபெறும் கிரிக்கெட் பெரும் போட்டி தான்.

குடா நாட்டு விளையாட்டு இரசிகர்கள் யாவரும் ஆவலோடு எதிர் பார்த்திருந்த மேற்படி பெரும் போட்டி (கடந்த) வெள்ளி சனிக்கிழமைகளில் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

பெரும்போட்டி ஆரம்பமான தினமான மார்ச் 31ஆம் திகதியே தந்தை செல்வாவின் பிறந்த தினமாகவும் அமைந்ததால் அந்நாளில் இரு வரலாற்று நிகழ்ச்சிகள் ஏககாலத்தில் இடம் பெற்றுள்ளன.

வரலாற்று நிகழ்ச்சியாக தந்தையின் 80 வது பிறந்த நாளும், மேற்படி கல்லூரிகளது 80வது பெரும்போட்டியும் ஒரு சேர ஒரே நாளில் இடம்பெறுவதாற்போலும், ஒலிபெருக்கி அறிவித்தல்கள் மெல்லிசை யாவும் தமிழில் இடம்பெற வேண்டுமென்ற மாணவர் தூய தமிழ் இயக்கத்துக்கு சம்பந்தப்பட்ட கல்லூரிகளது நிர்வாகிகள் சற்றே செவி சாய்த்திருந்ததாகத் தெரியவருகின்றது. பெரும்போட்டி சிறப்பு மலரின் உள்வீடு மாணவர் போதனு மொழியில் அமையாவிடினும் கூட மலரின் முகப்பு அட்டையை நூற்றுக்கு நூறுவீதம் தமிழ் [illegible] [illegible] ஒலிபரப்பப்பட்ட மெல்லிசையிலும் மாணவர்போதனு மொழியே போட்டியின் போது சிறப்பாக 2ம் நாளில் கோலோச்சிற்று. உத்தியோகத்தர் அட்டைகள் இம் முறை முழுமையாகத் தமிழில் அச்சிடப்பட்டிருந்தது.

தமிழன் என்ருேர் இனம் உண்டு. தனியே அவர்க்கோர் குணமுண்டு. அமிழ்தம் அன்னவன் மொழியாகும். அன்பே அவனது வழியாகும் வாழ்வின் துறைகள் தோறும் தமிழை வழங்க வைக்க முடியுமென்பதற்கு எடுத்துக் காட்டாக நடந்து வரும் பெரும்போட்டியில் பண்பாட்டுப் புரட்சியை தந்தையின் சாத்வீக நெறியில் ஆரம்பித்து வைத்து நடைமுறைப்படுத்தியமாணவர்களுக்கு, சம்பந்தப்பட்ட கல்லூரிகளது நிர்வாகிகளுக்கு சிறப்பாக "பெரும் போட்டி" அமைப்பாளர்களுக்கு எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிருேம்.

அன்று யாழ்ப்பாணம் தபால் கந்தோர் முன் நின்று எல்லாம் தமிழ் இயக்கத்தை தந்தையவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். இன்று விளையாட்டுத்துறையிலும் தமிழ் மொழியை வழர்த்துவிட— வாழவைக்க யாழ் குடா நாட்டு மாணவ. மாணவிகள் முன்னிற்கின்றனர்.மாணவர்களது தமிழ் உணர்வு வாழ்க வெல்கவென்று வாழ்த்துவோம்.

## உலக வங்கி வடக்கு கிழக்குக்கும் நிதிஉதவுமா?

குருநாகல் மாவட்டத்தின் அபிவிருத்திக்கென உலக வங்கி இருபது கோடி ரூபாவை உதவியாக வழங்கியுள்ளது. இந்த உதவியைக் கொண்டு குருநாகல் மாவட்டத்தை அபிவிருத்தி செய்யுமாறு ஜனுதிபதி உத்தரவிட்டுள்ளாராம்.

இதேபோல சிங்கள அரசாங்கங்களினுல் புறக்கணிக்கப்பட்டிருக்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கும் ஒரு பெருந்தொகையை உதவிநிதியாக வழங்குவதற்கு உலக வங்கி முன்வருமா என்று அங்கலாய்ப்புடன் கேட்கின்றனர். வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள்,

இப்பத்திரிகை கொழும்பு-12, 194 ஏ, பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5-ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுவெளியிடப்பட்டது: அச்சுப் பதிப்பு: வஸ்தியன் அச்சகம், பிரதான வீதி, யாழ்ப்பாணம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org